

நேற்று (14.2.2026) திருப்பத்தூரில் நடைபெறும் "என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி" வடக்கு மண்டல வாக்குச்சாவடி குழுவினருக்கான பயிற்சி மாநாட்டில் கலந்து கொள்ள வருகைதந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சாலையின் இருபுறமும் திரண்டிருந்த பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (14.2.2026) திருப்பத்தூரில் நடைபெற்ற "என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி" வடக்கு மண்டல வாக்குச்சாவடி குழுவினருக்கான பயிற்சி மாநாட்டில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் திருமதி நிலோஃபர் கபில் தன்னை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டார்.

## கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஆர்.முத்தரசன் நடித்த 'அரிசி' பட ஆடியோ வெளியீடு:

# ஒருபடி அரிசிக்காக யாரும் இன்னொருவர் வீட்டு வாசலுக்குச் செல்லாத நிலையை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

## சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, பிப்.15-**

**சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.முத்தரசன் மற்றும் சமுத்திரக்கனி நடிப்பில் வெளியாகவுள்ள 'அரிசி' திரைப்படத்தின் டிரெயிலர் மற்றும் ஆடியோ வெளியீட்டு விழாவில், நேற்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினார்.**

அப்போது அவர், "ஒரு படி அரிசிக்காக யாரும் இன்னொருவர் வீட்டு வாசலுக்குச் சென்று காத்து நிற்கக் கூடாது என்ற நிலைமையைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்" என்று குறிப்பிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:

இன்று நம் அண்ணன் முத்தரசன் அவர்கள் நடித்துள்ள திரைப்படத்தின் டிரெய்லர் வெளியீடு மற்றும் இசை வெளியீட்டு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதலில் இந்தத் திரைக்குழுவினருக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால், பொதுவாகவே இந்த மாதிரி டிரெய்லர் வெளியீடு, இசை வெளியீட்டு நிகழ்ச்சிகளையெல்லாம் மிகப் பிரம்மாண்டமாக ஏதாவது ஒரு நட்சத்திர விடுதியில் நடத்துவார்கள்; அப்படி இல்லையென்றால், ஒரு மிகப்பெரிய திரையரங்கத்தில் நடத்துவார்கள். ஆனால், அரிசி படக்குழுவினர் இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக கலைஞர் கட்டிய இந்த வள்ளுவர் கோட்டத்தில் நடத்தியிருக்கிறார்கள். அதற்கு முதலில் என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நீங்களே சொல்லுங்கள்

அமைச்சராக நான் பொறுப்பேற்று, கடந்த நான்கு ஆண்டுகளாகத் திரைத்துறை சம்பந்தமான எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டதே கிடையாது. யார் எந்த நிகழ்ச்சிக்கு அழைத்தாலும், ``இல்லைங்க, நான் கலந்துகொள்வது கிடையாது" என்று சொல்லிவிடுவேன்.

ஆனால், அண்ணன் முத்தரசன் அவர்கள் அழைக்கும்போது, என்னால் அதைத் தட்டிக் கழிக்க முடியவில்லை. ``நீங்கள் தேதியைச் சொல்லுங்கள் அண்ணே, நான் வந்துவிடுகிறேன்" என்றேன். பிறகு நேரம் கேட்டார், நான் சொன்னேன் ``நேரத்தையும் நீங்களே சொல்லுங்கள் அண்ணே, நான் நிச்சயம் வந்துவிடுகிறேன்" என்று. அவரால் அழைக்கப்பட்டு, இழுத்து வரப்பட்டு இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன்.




### திரைப்பட விருதுகள்

நேற்று மாலை அரசு நிகழ்ச்சி ஒன்று நடந்தது. தமிழ்நாடு அரசு சார்பாகத் திரைப்பட விருதுகள் பல ஆண்டுகளாகக் கொடுக்கப்படாமல் இருந்து, கடந்த அ.தி.மு.க ஆட்சியில் 10 ஆண்டுகள் கொடுக்கப்படாமல் இருந்து, நம்முடைய முதலமைச்சர் அதற்காக ஒரு குழுவை அமைத்து, 2015-லிருந்து 2022-ஆம் ஆண்டு வரைக்கும் திரைப்பட விருதுகளைக் கொடுப்பதற்கான அந்த வாய்ப்பை வழங்கினார். நான் திரைப்படத் துறையிலிருந்து வெளியே வந்து இன்றைக்கு மக்கள் பணியாற்றி வருகிறேன். ஆனால் இன்றைக்கு நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் அண்ணன் முத்தரசன் அவர்கள், மக்கள் பணியிலிருந்து சினிமாவிற்கு அறிமுகமாகியிருக்கிறார். அவர் சினிமா துறைக்கு வந்திருந்தாலும், இந்தப் படம் எவ்வளவு பெரிய வெற்றியைப் பெற்றாலும், நிச்சயம் மக்கள் பணிக்குத்தான் அவர் முதலில் முக்கியத்துவம் கொடுப்பார்; அதில் யாருக்கும் எந்தச் சந்தேகமும் வேண்டாம்.

### தமிழ்நாட்டு மக்கள்

அவர் சினிமாவின் உச்சத்திற்குப் போனாலும், தனது பணியின் உச்சத்திற்குப் போனாலும் அவர் எப்போதுமே விரும்புவது மக்களோடு மக்களாக இருப்பதுதான் என்பது தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அரசியலில் இருந்து சினிமாவிற்கு வந்திருக்கக்கூடிய அண்ணன் முத்தரசன் அவர்களுக்கு, நானும் சில காலம் திரைத்துறையில் இருந்தவன், முன்னாள் திரைத்துறையைச் சேர்ந்தவன் என்கிற வகையில் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களுக்காகப் பல ஆண்டுகள் களப்போராளியாக உழைத்தவர் அண்ணன் முத்தரசன் அவர்கள். இப்பொழுது திரையிலும் மக்களின் உரிமைகளைப் பேச வந்திருக்கின்றார். அதுவும் இந்தப் படத்தில் குறிப்பாகச் சிறப்பாக விவசாயியாக அவர் நடித்திருக்கிறார். அந்தப் போஸ்டர், டிரெய்லர், பாடல்களையெல்லாம் பார்க்கும்பொழுது இயல்பிலேயே அவர்ஒருவிவசாயிஎன்பதால்,விவசாயியாக நடித்திருக்கிறார் என்பதைச் சொல்வதைவிட ஒரு விவசாயியாக அவர் வாழ்ந்திருக்கிறார் என்று சொன்னால், அதை நிச்சயம் உங்களால் ஏற்றுக்கொள்ள முடியும்.

### கம்யூனிசக் கொள்கை

அண்ணன் முத்தரசன் மட்டுமல்ல, இங்கு சமுத்திரகனி அவர்களும் கம்யூனிசக் கொள்கைகளை உணர்ந்தவர், அதைத் தொடர்ந்து பேசக்கூடியவர். விவசாயிகளின் உரிமைக்காக கம்யூனிஸ்டுகள் களத்தில் இறங்கினால், நிச்சயம் அதில் எப்போதுமே வெற்றி பெற்றிருக்கிறார்கள், இந்த முறையும் வெற்றி பெறுவார்கள். இந்தப் படமும் அதேபோல நிச்சயமாக ஒரு வெற்றிப் படமாக அமையும்.

இந்தப் படத்தின் தலைப்பு 'அரிசி, உயிரின் மறுபெயர்' என்று வைத்துள்ளார்கள். இந்த அரிசிக்காக ஒரு காலத்தில் மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள்! பண்ணையார்களிடம் வாழ்க்கை முழுவதும் அடிமையாக இருந்தார்கள். காலமெல்லாம் வயலிலேயே வேலை பார்த்தாலும், அவர்களுக்கு ஒரு நேரச் சாப்பாட்டிற்குக்கூட வழியில்லாமல் இருந்தது. அப்படிப்பட்ட விவசாயத் தொழிலாளர்களின் உரிமைக்காகக் களத்தில் இறங்கி, கம்யூனிஸ்டுகள் இதுவரைக்கும் எத்தனையோ போராட்டங்களை நடத்தி இருக்கிறார்கள், அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

அதனால்தான் டாக்டர் கலைஞர் அவர்கள், "நான் மட்டும் தந்தை பெரியார் அவர்களையும் அண்ணாவையும் என்னுடைய வாழ்க்கையில் சந்திக்காமல் இருந்திருந்தால், நானும் ஒரு கம்யூனிசத் தோழராக மாறி இருப்பேன்" என்று அடிக்கடி சொல்வார்.

### ஒரு படி அரிசி திட்டம்

அப்படிப்பட்ட கலைஞர் அவர்கள்தான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, ஏழை எளிய மக்களுக்கு அரிசி கிடைப்பதற்கான எல்லா வழிகளையும் செய்துகொடுத்தார். ஒரு படி அரிசிக்காக யாரும் இன்னொருவர் வீட்டு வாசலுக்குச் சென்று காத்து நிற்கக் கூடாது என்ற நிலைமையைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். இன்னும் சொல்லப் போனால், 2006 சட்டமன்றத் தேர்தலின் போது கலைஞர் அவர்கள் ஒரு தேர்தல் வாக்குறுதி கொடுத்தார், "இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி" என்று முதல் முதலில் அறிவித்தவர் அவர்தான். அது அந்த காலத்தில் மக்களிடம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. ஏழை மக்களின் கனவை நனவாக்கியவர் டாக்டர் கலைஞர் அவர்கள். பின்னர் அந்த இரண்டு ரூபாயை ஒரு ரூபாயாகவும் அவர் குறைத்தார். அதன் அடுத்த கட்டமாகத்தான் இன்றைக்கு விலையில்லா அரிசித் திட்டம் வந்திருக்கிறது. மக்களுடைய அடிப்படைத் தேவையான இந்த அரிசிப் பிரச்சினையைப் போக்கியவர் டாக்டர் கலைஞர் அவர்கள். எனவே, அந்த வகையில் விவசாயிகளின் உரிமைக்கான இந்தப் படம் நிச்சயம் வெல்லும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அண்ணன் முத்தரசன் அவர்களின் அரசியல் களப்பணியும் அதேபோல கலைப் பணியும் மேன்மேலும் சிறக்கட்டும் என்று உங்கள் அனைவரின் சார்பாக வாழ்த்துகிறேன்.

இந்தத் திரைப்படத்தின் தயாரிப்பாளர்கள், கலைஞர்கள், இயக்குனர், தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவருக்கும் நம் அனைவரின் சார்பாக என்னுடைய வாழ்த்துகளைக் கூறி, இந்தச் சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்த அண்ணன் முத்தரசன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் மாநிலத் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வைகோ, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன், மனிதநேய மக்கள் கட்சி அமைப்புச் செயலாளர் புதுமடம் ஹலீம், சி.பி.ஐ (எம்.எல்) கட்சி மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ், இயக்குனரும் நடிகருமான சமுத்திரகனி, விடுதலை சிறுத்தைகள் கட்சித் துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, மாரிமுத்து, ரூபி மனோகரன், கனகராஜ், திருமுருகன் காந்தி, மருத்துவர் ஷர்மிளா, திராவிட முன்னேற்றக் கழக சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், அகஸ்டின் பாபு, நுங்கை வி.எஸ்.ராஜ், ஐ.யு.எம்.எல் பொதுச் செயலாளர் முகமது அபுபக்கர், மருத்துவர் ரவீந்திரநாத், சாந்தி, தயாரிப்பாளர் சண்முகம், அரிசி பட இயக்குனர் எஸ்.ஏ.விஜயகுமார், தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத் தலைவர் ஆர்.கே.செல்வமணி மற்றும் திரைப்படத்துறையினர் பலரும் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் நத்தாநல்லூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையத்தை மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் வட்டார வளர்ச்சி அலுவலர். திருமதி. பிரமிளா. ஒன்றியக் குழு துணைத் தலைவர் பி.சேகர், பேரூர் செயலாளர் என்.பாண்டியன், ஊராட்சி மன்ற தலைவர் வி. மணி, கிளை செயலாளர்கள் ஏ.ராஜி, ஆர். முனுசாமி உள்ளிட்ட. ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம் சார்பில் அயப்பாக்கம் ஊராட்சியில் வெல்லும் தமிழ்ப்பெண்கள், ஸ்டாலின் மகளிர் படைக்கு பரப்புரை பயிற்சி கூட்டம் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி ஏற்பாட்டில் நடந்த பயிற்சி கூட்டத்தில் சிறப்பு பயிற்சி அளிக்க மதுரவாயல் தொகுதிப் பார்வையாளர் ஆ.மாலினி, எஸ்.சகிலா ஆகியோர் கலந்து கொண்டு ஒன்றியத்திற்குள் அடங்கிய 73 பாகங்களின் பொறுப்பாளர்களுக்கு பாகம் தோறும், வீடு, வீடாக சென்று எவ்வாறு பணியாற்ற வேண்டும், எந்த வழியில் ஆதரவு திரட்ட வேண்டும் என்ற ஆலோசனைகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் செண்பகவள்ளி, தேவி, ஷர்மிளா, தேன்மொழி, கிளாரா, பூங்கோதை, ஷாமிலா, ஜெயசுதா மற்றும் பாக பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு பரப்புரை பயிற்சி பெற்றனர்.